**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**Provincial Department of Education, Northern Province**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை – 2020**
**General Certificate of Education (Ord.Level) Model Exam - 2020**

| நேரம்: 2 மணித்தியாலங்கள் | **தமிழ்மொழியும் இலக்கியமும் - II** | பாட எண் : 22 T II |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ............................................................ | | |

**கவனிக்க:**
- ***(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.***
- ***(2) இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.***

**01. சுருக்கமான விடை தருக**

அ) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்தெழுதுக.
“மறையென லறியா மாயமிலாய மொடுயர்”

ஆ) பின்வரும் பேச்சு வழக்குத்தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
‘‘ஐயா சாப்பிட்டு முடிஞ்சு ஆறுதலா இருக்கேக்க கேக்க வேணும்’’

இ) ‘வளை’ என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியம் அமைக்குக

ஈ) பின்வரும் வாக்கியத்தை வழு நீக்கி எழுதுக.
விரிவு படுத்தப்பட்ட மாணவர்களுக்கான வகுப்பறை மிகப் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

உ) நான் வாழ ஒரு தொழிலாவது கிடைக்காதா என ஏங்கி நிற்கிறேன். இவ் வாக்கியத்திலுள்ள இணைப்பிடைச்சொற்களை இனங்கண்டு எழுதுக.

ஊ) பின்வரும் தொடரின் எழுவாய், பயனிலையைக் குறிப்பிடுக.
மனிதர் பலர் தம்முள் ஒன்று கூடிய கூட்டமே சமூக அமைப்புக்கு அத்திவாரம் ஆகின்றது.

எ) பின்வருவனவற்றுள் வர்ணனையாளனுக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகளைக் குறிப்பிடுக.
வெட்டிப்பேசுதல், சரளமாகப்பேசுதல், முரண்படக்கூறல், விடயப்புலமை

ஏ) பின்வரும் தொடரில் இடம்பெறும் அணியை இனங்கண்டு விளக்குக.
வாதப்பிரதிவாத மின்னல்கள் முழக்கங்கள் நடக்கின்றன.

ஐ) ‘‘கரிகாற் சோழன் கடாரம் வென்றான்’’ இவ் வாக்கியத்தைச் செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக.

ஒ) தரவை, பசுந்து என்பவை எப்பிரதேச வழக்குச் சொற்கள் எனக் குறிப்பிடுக.

(2×10=20 புள்ளிகள்)

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத்தெரிவு செய்து 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. நீர் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலைப்பிடுக.**

அ. இன்று மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்வதற்காக மரங்களை வெட்டுதல், மண்ணகழ்தல், கழிவுகளை நீரில் கொட்டுதல், முதலிய செயற்பாடுகளால் இயற்கைச் சமநிலைகளைக் குழப்புகின்றான். அத்துடன் மனிதனுக்குச் சவாலாக இயற்கை அனர்த்தங்களும் நிகழ்ந்த வண்ணமுள்ளன. அத்துடன் நில நடுக்கம், வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்றனவும் பயமுறுத்திய வண்ணமுள்ளன. எனவே இயற்கை பாதிப்படையும் முறைகள், பாதுகாக்கும் வழிகள் என்பவற்றைக் குறிப்பிட்டு **விளக்கக் கட்டுரை.**

ஆ. தொழிநுட்ப வளர்ச்சியின் வரிசையில் கையடக்கத் தொலைபேசியின் பாவனை மனித வாழ்வை வளப்படுத்துவதோடு மட்டுமல்லாது சீரழித்தும் வருகின்றது. வகைவகையான தொலைபேசிகளால் மாணவர் கல்வியும் பாதிப்படைகின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு நண்பர் இருவருக்கிடையேயான **உரையாடல்.**

இ. மனிதனைத் தலைநிமிர்ந்து வாழச்செய்வது ஒழுக்கமும் கல்வியும் ஆகும். ஒழுக்கமற்ற கல்வி பயனற்றது. நிரம்பக்கற்றவனாயினும் ஒழுக்கமற்றவனாயின் அவன் அரை மனிதன். எனவே ஒருவனைக் கற்றவன் என எடுத்துக்காட்டுவது அவனது ஒழுக்கமாகும். ஒழுக்கமும் கல்வியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல பிரிக்க முடியாதவை என்ற பொருள் பட நிகழ்த்தும் **மேடைப்பேச்சு.**

ஈ. வருடங்கள் சில கடந்த நிலையில் தான் தனிமைப்பட்டு நிற்பதைத் தன் அனுபவத்தின் ஊடாக கண்டான் சயந்தன். பெற்றோரின் அன்பை வழிகாட்டலை விட்டெறிந்தான். தனது உடன்பிறப்புக்களை மறந்த அவன் தனிமைப்படுத்தப்பட்டு தன் தவறுகளை உணர்ந்து பெற்றோரையும் உடன் பிறப்புக்களையும் மறுபடியும் ஏற்றுக்கொள்ள அவர்களை நோக்கிப் பயணிக்கத் தொடங்கினான். இதைக் கருவாகக் கொண்ட ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**03. கீழே தரப்பட்ட உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.**

இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல் மிகப்பிரபல்யமானதொன்றாக அமைகிறது. முழு உலகமுமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கி விட்டமைக்கு தொடர்பாடல் விருத்தியே அடிப்படைக்காரணமாகும். பழைமை மிக்க தொடர்பாடல் முறையான கடிதம், தொலைபேசி, தொலைநகல், இலத்திரனியல் தபால் போன்ற பல்வேறு ஊடகங்களும் இன்று அகில உலகையும் ஆட்டிப்படைக்கின்றன. மேற்கூறப்பட்ட பல்வேறு சாதனங்கள் தோற்றம் பெற்ற போதும் மனிதப்பண்பும் நேயமும் மிக்க நேரடித்தொடர்பானது எல்லாவற்றிலும் மேலானது என்பதை நாம் உணரவில்லை. உயர்ந்த அறிவும் ஆற்றலும் விஞ்ஞானத்தில் வியத்தகு சாதனைப்போக்கும் மிக்க மனிதன் தனது நாளாந்தத் தொடர்பாடலை பண்புடனும் சிறப்புடனும் மேற்கொள்ள வேண்டும். எமது நாளாந்த வாழ்வில் ஏற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும் தேவைகளின் போதும் நாம் பல்றேு வகைப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அத்தகைய தொடர்பு பல்வேறு மட்டங்களில் ஏற்படும். நம்மை விட அறிவிலும் ஆற்றலிலும் கல்வியிலும் செல்வத்திலும் சிறப்புப் பெற்றவர்களுடனும் இத்தொடர்பாடல் இருக்கலாம். நமது நாட்டவர்களுடன் மட்டுமன்றி வேற்றுநாட்டவர்களுடனும் இருக்கலாம். இவ்வாறு பல்வேறு வகைப்பட்டவர்களுடனும் நாம் தொடர்பாடல் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கேற்றதாக நாம் தொடர்பாடலை திறம்பட மேற்கொள்ளும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

(10 புள்ளிகள்)

**04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

விஞ்ஞானி என்பவன் நுணுகி ஆராய்கின்றவன். பொறியியலாளன் ஏற்கனவே இல்லாத ஒன்றைப் புதிதாகப் படைப்பவன். தொழிநுட்பவியலாளன் கருத்துக்களையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துபவன். அத்துடன் சமூகம் தொடர்பான தனது பொறுப்புக்களையும் கடமைகளையும் உணர்ந்தவன். விஞ்ஞானக்கல்வி இம்மூன்று இயல்புகளையும் மாணவர்கள் பெறும் வகையில் திட்டமிடப்பட வேண்டும் என்பது கல்வியியலாளர் கருத்து. போசாக்கின்மை, நோய், பிணி, எழுத்தறிவின்மை, சமத்துவமின்மை என்பவற்றைப் படிப்படியாகக் குறைத்து இறுதியாக இல்லாதொழிப்பது அபிவிருத்தி எனப்படும். இவ்வாறான முன்னேற்றத்தை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான போராட்டம் வெற்றியடைய விஞ்ஞானக்கல்வி உதவ வேண்டும்.

அ) தொழிநுட்பவியலாளன் என்பவன் யார்?

ஆ) அபிவிருத்தி எனப்படுவது யாது?

இ) விஞ்ஞானக்கல்வி தொடர்பாக கல்வியாளரின் கருத்து எவ்வாறானது?

ஈ) விஞ்ஞானிக்கும் பொறியியலாளனுக்கும் இடையேயான வேறுபாட்டினைக் குறிப்பிடுக.

உ) விஞ்ஞானக்கல்வி எதற்கு உதவ வேண்டுமெனக் கட்டுரையாசிரியர் கூறுகின்றார்?

(10 புள்ளிகள்)

05. நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயல், மழை என்பவற்றால் பாதிப்படைந்த மக்கள் இழப்பீடுகள் எவையும் கிடைக்கப்பெறாது பல்வேறு சிரமங்களை அனுபவித்த வண்ணமுள்ளனர். எனவே இவர்களுக்குரிய இழப்பீடுகளை துரிதப்படுத்துமாறு வேண்டி பிரதேச செயலருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

**அல்லது**

மாணவர் மன்றச் செயலாளராக உம்மை கருத்திற்கொண்டு உமது பாடசாலையில் நடைபெற்று முடிந்த பரிசளிப்பு விழா தொடர்பான அறிக்கை ஒன்றினை 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

(15 புள்ளிகள்)